# தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையியலில் நிலப்பாகுபாடு

**முனைவர் இரா.பபித்ரா**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி – 620 002**

9

**ஆய்வுச்சுருக்கம்**

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மிகப் பழமையான நூல் தொல்காப்பிமாகும். தொல்காப்பியரால் எழுதப்பெற்ற இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களையும் அதிகாரங்களுக்கு ஒன்பது இயல்களாக மொத்தம் 27 இயல்களையும் கொண்டுள்ளது. அவற்றில் பொருளதிகார அகத்திணையியலில் திணை மற்றும் நிலப்பாகுபாடு பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** திணை –ஒழுக்கம்,திரை –கடல்,வையம் –உலகம்,மாயோன் –திருமால் ,சேயோன் -முருகன்

**முன்னுரை**

தொல்காப்பியர் அகத்திணையியலில் எழுவகை திணைகளையும் அத்திணைக்களுக்குரிய நிலம் பொழுது ஒழுக்கம் மற்றும் ஒவ்வொரு நிலங்களில் உள்ள மக்கள் வழிபடக்கூடிய தெய்வம் முதலாகச் சொல்லப்பட்ட அனைத்தையும் ஆய்வதே அகத்திணையியலின் நிலப்பாகுபாடாகும்.

**அகம் விளக்கம்**

ஒத்த அன்பு, ஒத்த குலம், ஒத்த குணம், ஒத்த செல்வம், ஒத்த இளமை ஆகிய அனைத்து பண்புகளை கொண்ட உள்ளத்தினை உடைய தலைவனும் தலைவியும் இணைவதே அகம் என இளம்பூரணர் எடுத்துரைக்கின்றார்1

**திணை**

திணையினை அகத்திணை, புறத்திணை என்று இரண்டாக பகுப்பர். அகத்திணை என்பது தலைவன் தலைவியின் அக ஒழுக்கத்தினையும் புறத்திணை என்பது உலகப் புற வாழ்வில் உள்ள அரசியல், பொதுவாழ்வியலில் உள்ள கொடை, அளி, (கருணை) செங்கோல், வீரம் பற்றியதாகும்.

**அகத்திணைகள் ஏழு**

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப”[2]**

கைக்கிளை என்று சொல்லப்படும் பொருள் முதலாகப் பெருந்திணை என்று சொல்லப்படும் பொருள் ஈறாக ஏழு பொருள் முற்படக் கூறப்பட்டன என்று தொல்காப்பியர் கூறுவதன் வழி பிற்படக் கிளக்கப்படுவனவும் ஏழுவகை உண்டு என்பதனை,

**அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறப்பட கிளப்பின்[3]**

முற்படக்கிளந்த எழுதிணை என்பதனால் பிற்படக் கிளந்த எழுதிணை உள்ளன என்பது இந் நூற்பாவின் வழி அறிய முடிகிறது.

வெட்சி முதலாகப் பாடண்திணை இறுதியாக புறத்திணைகள் ஏழு என்பதும் ஆக மொத்தத்தில் பொருளதிகாரத்தில் பதினான்கு பொருள் இருக்கின்றன என்பதும் புலனாகின்றது.

**கைக்கிளை**

கைக்கிளை என்பது ஒருதலைக் காதல். கை என்பது சிறுமைப் பற்றி வரும், கிளை என்பது உறவு பற்றியும் வரும். இது பெருமை இல்லாத தலைமக்கள் உறவினைப் பற்றிக் கூறுவதாகும்.

காம உணர்வு கொண்ட இளைஞன் காம உணர்வு தோன்றாத இளம்பெண் ஒருத்தியிடம் தன் உணர்வை வெளிப்படுத்துகிறான் ஒன்றும் அறியாத அவளிடம் அவனுடைய அளவற்ற காம உணர்வை வெளிப்படுத்தி அவளைப் புகழ்ந்தும் பழித்தும் பேசுகின்றான். அறியாப் பருவத்து அவளிடம் மறுமொழி இல்லாததால் தானே பேசி மகிழ்ச்சி அடைவான் என்ற கருத்தினை,

**காமம் சாலா இளமை யோள்வயின்**[4]

என்ற நூற்பாவின் வழி உணரமுடிகின்றது.

கைக்கிளை காமம் யாரிடம் தோன்றும் என்பதனை பிற்காலத்தில் தோன்றிய நம்பியகப்பொருள் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

அதுவே

**இறைமை இல்லோர்க்கும் இழிகுலத்தோர்க்கும்**
**முறைமை உரித்தே முன்னும் காலை**[5]

**ஐந்திணை**

ஐந்திணை என்பது முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல், மருதம் இவற்றுள் பாலை என்பதனை "நடுவண் ஐந்திணை" எனக் தொல்காப்பியம் குறிப்பிடுவதாக கீழ்க்காணும்

**நூற்பா விளக்குகின்றது.**
**அவற்றுள்**
**நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே**[6]

ஏழு வகை திணையினும் நிலம் பெறுவன நான்கு என்று குறிப்பிடுகின்றார்.

ஒருதலை காதல் என்று கூறப்படும் கைக்கிளைக்கும், பொருந்தாக்காமம் எனப்படும் பெருந்திணைக்கும் நிலங்கள் வகுக்கப்படவில்லை இவை அனைத்து நிலங்களுக்கும் பொதுவானவையே.

பழந்தமிழகத்தில் பாலை என்றொரு பாகுபாடு இல்லை காடும் காடு சார்ந்த இடமானமுல்லையும் மலையும் மலைச் சார்ந்த இடமான குறிஞ்சியும் வறண்ட காலத்தில் தன் நிலை மாறி பாலை நிலமாகும் என்ற கருத்தினை இளங்கோவடிகள் அவர்கள் தமது சிலப்பதிகாரத்தில்,

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்**[7]

அகத்திணை ஏழில் பாலை திணைக்கு தனி நிலம் இல்லாதது போல் கைக்கிளையும் பெருந்திணையும் தமக்கென்று நிலம் இல்லாமல் பொதுவாக அமையும்.

**முதற்பொருள்**

உலக வாழ்வியலுக்கு அடிப்படையாக அமைவதே முதற்பொருள் என க.பஞ்சாங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஐம்பெரு பூதங்களில் மனிதர்களுக்கு மிகவும் அணுக்கமாக இருக்கின்ற, அதாவது அவர்களின் உணவுத் தோட்டத்திற்கும் குந்தி இருப்பதற்கான ஓர் இடத்தை உகருவாக்கிக் கொள்வதற்கும் ஆதாரமாக இருக்கின்ற இயற்கை நிலப்பரப்பே அவர்களது ஆளுகைக்கு உட்படும் முதற்பொருளாக இருக்கிறது. எனவே நிலமும் நிலத்தை ஆட்சி செலுத்தும் பொழுதும் இவர்களுக்கு முதற்பொருளே ஆகின்றன.[8]

**முதல், கரு, உரிப்பொருள்கள்**

**முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை[9]**

மேற்சொல்லப்பட்ட நூற்பாவானது உலகத்தில் உள்ள பொருட்களை; எல்லாம் இந்த முப்பொருளினாலே அடங்கும் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

முறைமையாற் சிறத்தலாவது என்பதனால் ஏதாவது ஒரு செய்யுளில் முதல் கரு உரிப்பொருள்கள் வந்தால் அவற்றில் முதற்பொருள் திணையாகக் கொள்ளப்படும். முதற்பொருள் தவிர்த்து ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளினை திணையாகக் கொள்ளப்படும் என்றும் உரிப்பொருளே வந்தால் அவ் உரிப்பொருளே திணையாகக் கொள்ளப்படும் என முன்பு கூறப்பட்டது. பாடலுட் பயின்றவை என்பதானால் அவ்வாறன்றி ஒரு பொருட்கு ஒரு காரணம் கூறாது மூன்று காரணம் கூறியது யாதெனின் உயர்ந்தோர் என்ற வழிக் குலத்தினால் உயர்ந்தோரையும் கல்வியால் உயர்ந்தோரையும் செல்வத்தால் உயர்ந்தோரையும் காட்டும் என்பது போல கொள்ள வேண்டும் என்கிறார் இளம்பூரணர்[10]

சங்க இலக்கியங்களில் உள்ள அகப்பாடல்கள் அனைத்தும் முப்பொருளின் அடிப்படையிலேயே ஆக்கப்பட்டுள்ளன என்பதனை பெ.மாதையன் அவர்கள்,

சங்க அகத்திணைப் பாடல்கள் உரி என்ற மையப் பாடுபொருளை ஒழுக்கத்தை முதல் எனப்பட்ட நிலம், பொழுது இரண்டின் அடிப்படையிலும் கருப்பொருள் எனப்பட்ட தெய்வம், உணவு முதலியவற்றின் சார்பிலும் உள்ளுறை, இறைச்சி முதலான குறிப்புக் பொருட்கள் அவற்றின் சார்பில் இடம்பெறும் வகையிலும் பாடும் கவிதையாக்க மரபை அடிப்படைப் பண்பாகக் கொண்டன.[11]

**முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்புஎன மொழிப இயல்பு உணர்ந்தோரே.[12]**

உலகத்தின் இயல்புகளை நன்கு உணர்ந்த சான்றோர்கள் முதல் என்பது நிலம் பொழுது என இரண்டின் இயல்பு எனக் குறிப்பிடுகின்றார்.

**முதற்பொருள் நிலம்**

நிலமெனப்படுவது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என இரண்டாகப் பகுக்கின்றனர்.

**முதற்பொருள் பொழுது (காலம்)**

பொழுதென்பதை சிறுபொழுது, பெரும்பொழுது என பகுப்பர்.

பெரும் பொழுதென்பது ஓர் ஆண்டின் ஆறு பிரிவுகளாக பிரிக்கப்படும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறுவகைப்படும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இரண்டு மாதங்கள் அடங்கும்.

சிறுபொழுதென்பது ஒரு நாளின் ஆறு பிரிவுகளாகும். மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல். எற்பாடு என ஆறுவகைப்படும். ஒரு நாளின் அறுபது நாழிகையும் ஒவ்வொரு சிறுபொழுதுக்கும் பத்துப்பத்து நாழிகையாக வரும்

**முதற்பொருள் நிலம்**

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெயதல்எனச்**
**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே**[13]

மாயோனாகிய திருமால் விரும்பி வாழும் காடு பொருந்திய உலகமும், சேயோனாகிய முருகன் விரும்பி வாழும் மைவரை உலகமும் இந்திரன் விரும்பி வாழும் நன்னீர் நிலமாகிய வயல் பொருந்திய உலகமும் வருணன் விரும்பிவாழும் பெருமணல் பொருந்திய நெய்தல் உலகமுமாகிய இவையனைத்தும் முன்னோரால் முறையாக வகுக்கப்பட்ட நிலமாகும். சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே என்றதனால் இம்முறையன்றிச் சொல்லவும் படும் என்று கொள்ளலாம். அதாவது இவற்றுள் யாதானும் ஒன்றை முன்னும் பின்னுமாக வைத்துக் கூறுதல் சான்றோர் மரபு எனக் கொள்ளவேண்டும். இவற்றில் காடுறை நிலம் என்னாது உலகம் என்று கூறியதற்கு காரணம் ஐவ்வகை பூதத்தானும் ஐந்து இடம் என்று உரைத்தார் என்பதை அறிய முடிகிறது.

**நெல்லோடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்**[14]

என்றது காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது என்றலும்,

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொணட நட்பே**[15]

என்ற வழி மைவரை உலகிற்கு குறிஞ்சிப்பூ சிறந்தது என்றலும்,

**இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்**
**தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர**[16]

என்ற வழி தீம்புனல் உலகத்திற்கு மருது சிறந்தது என்றும்

**பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**
**இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்**
**கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்17**

என்பதன் வழி பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையாலும் இந்நிலங்களை இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படும்.

பாலை என்பதற்கு நிலம் இல்லையென்றாலும் வேனிற்காலம் பற்றி வருவதால் அக்காலத்தில் தளிரும் சினையும் வாடுதல் இல்லாமல் நிற்பதோர் பாலையாகும். கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றிற்கு நிலமும் காலமும் பகுத்து கூறவில்லை.

**முல்லைத்திணையின் பொழுதுகள்**

**காரும் மாலையும் முல்லை[18]**

முல்லைத்திணைக்குரிய பெரும் பொழுது ஆவணி, புரட்டாசி எனப்படும் கார்காலமாகும். சிறுபொழுது மாலைக்காலமாகும். கார்காலத்தை முல்லைத்திணைக்கு வைத்ததற்கு சிறப்பு என்னவெனில் முல்லையாகிய நிலமானது வேனிற்காலத்து வெப்பம் காரணமாக உலர்ந்து காய்ந்து அழகிழந்து காணப்படும். கார்காலம் தொடங்கியவுடன் அக்காடானது அழகுறும் என்பது தலைவனை வேனிற்காலத்து பிரிந்த தலைவி பொலிவிழந்து வருத்தமுற, காடு அழகுற கார்காலம் வந்து காடு அழகுற்றது போல கார்காலத்தில் தலைவன் வருகையினால் தலைவி அழகுற்றால் என்பதை குறிக்கிறது. சிறுபொழுதாகிய மாலையானது முல்லை மலருங்காலம் மற்றும் அந்நிலத்து கருப்பொருளான ஆவினங்கள் மேய்ச்சல் முடிந்து வீடு திரும்பும் காலமாதலால் தனித்திருந்த தலைவி வருத்தமடைவாள் என்பதால் அது சிறந்தது ஆயிற்று.

**குறிஞ்சித்திணையின் பொழுதுகள்**

**குறிஞ்சி**

**கூதிர் யாமம் என்மனார் புலவர்[19]**

**பனிஎதிர் பருவமும் உரித்துஎன மொழிப[20]**

ஐப்பசி, கார்த்திகை என்ற இவ்விரு மாதங்களும் குளிர்காலம் எனப்படும் குறிஞ்சி நிலத்திற்குரிய பெரும் பொழுதுகளாகும். நடு இரவு (யாமம்) என்பது குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுதாகும்.

குளிர்காலத்தோடு முன்பனிக்காலமான மார்கழி தை என்ற இருமாதங்களும் குறிஞ்சித் திணைக்குரியதாகக் கொள்ளப்படும். குளிர்காலத்தையும் முன்பனிக் காலத்தையும் குறிஞ்சித்திணைக்கு வைத்ததற்கு சிறப்பானது என்னவெனில் குறிஞ்சிதிணை என்றாலே பெரும்பான்மை களவுப்புணர்ச்சி பொருளாதலின் அப்புணர்ச்சிக்குத் தனித்த இடம் வேண்டுமென்ற காரணத்தினாலும் குளிர்காலத்திலும் முன்பனிக் காலத்திலும் பகலும் இரவும் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்படும் என்பதால் தலைவனும் தலைவியும் தனியாக சந்தித்தல் எளிதாதலால் இது சிறந்தது என்பார். சிறுபொழுதாகிய நடுநாள் யாமமும் அவ்வாறே ஆதலில் அதுவும் சிறந்தது.

**மருதத்திணையின் பொழுதுகள்**

**வைகறை விடியல் மருதம்[21]**

சிறு பொழுதுகளாகிய விடிவதற்கு முன்னுள்ள வைகறையும் விடியலும் மருதத்திணைக்கு உரியவை ஆகும்.

பெரும்பொழுது கூறப்படவில்லை என்பதனால் ஆண்டு முழுவதும் மருதத்திணைக்குரிய பெரும்பொழுதாக கொள்ளப்படும். சிறுபொழுதாக வைகறை விடியலை வைத்தற்கு காரணம் மருத நிலத்தில் வாழும் மக்கள் பெருஞ்செல்வந்தர்கள் அவர்கள் தலைவியைப் பிரிந்து அருகில் உள்ள பரத்தையரிடம்

செல்வர். அவ்வாறு பிரிந்த தலைவன் தம் மனைக்கு வரும் நேரமே வைகறைப் பொழுதாகும் காரணம் பரத்தையர் இல்லத்திற்கு சென்று வந்தமையை பிறர் அறியாமல் தம் மனைக்கு செல்வதற்கும் அங்கு தம் மனைவியின் ஊடல் கொண்டிருப்பதால் சிறந்தது என்கிறார்

**நெய்தல் திணையின் பொழுது**

**எற்பாடு**

**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்**[22]

நண்பகலின் பின் பத்து நாழிகையும் நெய்தல் திணையின் சிறுபொழுதாகும்

மருதத்திணையைப் போன்றே தனியாக பெரும்பொழுது சொல்லப்படாமல் ஆண்டு முழுவதும் எடுத்துக்கொள்ளப்படும். நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின் தனிமையுற்று இரங்குவார்க்கு பகற்பொழுதினும் இராப்பொழுது மிகுந்து காணப்படுதலின் அப்போது வருதற்கு ஏதுவாகிய எற்பாடு கண்டு இனி அடுத்து மாலைப்பொழுதென நினைத்து வருத்தமுறுதலால் அதற்கு அது சிறந்தது என்பர்.

**பாலைத்திணைக்குரிய பொழுதுகள்**

**நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.**[23]

**பின்பனிதானும் உரித்தென மொழிப**[24]

அன்பின் ஐந்திணைகளில் நடுவண் திணையாக இருப்பது பாலைத்திணையாகும் அப்பாலைத்திணைக்கு சிறுபொழுதானது நண்பகலாகும். பெரும்பொழுதானது இளவேனில் எனப்படும் சித்திரை, வைகாசி மாதங்களும் ஆனி, ஆடி மாதங்களுமாகும்.

பாலைப் பொருளாவது பிரிவு. அப்பிரிவின் போது தலைமகன் செல்லும் வழி நீரும் நிழலும் அற்றது ஆதலால் தலைமகள் கலங்குவாள் என்பதால் சிறந்தது என்பர்.

பாலைக்கு உரிய பொருளானது இருவகைப் பிரிவாகக் கொள்ளப்படும் அவை தலைமகளைப்பிரிதல் தலைமகளை உடன்கொண்டு தமரைப் பிரிதல் என்பதை,

**இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்**

**உரியதாகும் என்மனார் புலவர்**[25] என்கிறார்.

**திணையில் மயக்கம்**

புலமை மிகுந்த புலவர்கள் ஒரு திணைக்குரிய முதற்பொருள் இன்னொரு திணையோடு மயங்கி வருவது கடிதலில்லை என்கிறார்கள். ஆதலால் ஒரு திணைக்குரிய நிலம் இன்னொரு திணைக்குரிய நிலத்தோடு மயங்காது ஆனால் பொழுது மயங்கி வரும் என்பது தெளிவாகிறது.

**முதற்பொருள், கருப்பொருள் மயங்குதல்**

**உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே**[26]

என்ற நூற்பாவானது,

ஒருதிணைக்குரிய உரிப்பொருள் இன்னொரு திணையில் மயங்கி வருவதில்லை ஆனால் ஒரு திணைக்குரிய கருப்பொருளும் முதற்பொருளும் மற்றாரு திணையில் சிறிய அளவில் மயங்கி வரலாம் என்பதை பின்வரும் சான்றானது விளக்குகிறது.

**ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்**  
**ஊசி போகிய சூழ்செய் மாலையன்**  
**பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்**

**குயமண் டாகம் செஞ்சாந்து நீவி**[27]

என்ற வழி மருத்திற்கு கருப்பொருளாகிய கழுநீரும் குறிஞ்சி நிலத்திற்குரிய வெட்சிப் பூவும் அணிந்தோன் என்றமையால் கருப்பொருள் மயக்கமாயிற்று என்பது தெளிவாகிறது.

மேலும், வந்தது கொண்டு வராதது முடித்தல்28 என மரபியல் நூற்பாவின் படி யாதானும் ஒரு நிலத்திற்குரிய பூவும் புள்ளும் அந் நிலத்தெர்டும் பொழுதொடும் வரவில்லையென்றாலும் வந்த நிலத்தின் பயனை பெறும் என்பதை,

**எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**
**அந்நிலம் பொழுதொடு வாராவாயினும்**
**வந்த நிலத்தின் பயத்த ஆகும்** [29]

என்கிறது. இவ்வாறு வருவதும் திணைமயக்கமாகக் கொள்ளப்படும்.

உரிப்பொருள் அன்பின் ஐந்திணைகளுக்கு உரியது. உரிப்பொருள் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் மற்றைய திணைகளில் மயங்கிவரும் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

**ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்**

ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருளானது குறிஞ்சிக்கு புணர்தல் பாலைத்திணைக்கு பிரிதல், முல்லைத்திணைக்கு இருத்தல், நெய்தல் திணைக்கு இரங்கல், மருதத்திணைக்கு ஊடல். எல்லாத் திணைக்கும் பொதுவான கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் உரிப்பொருள் இல்லை என நச்சினார்க்கிணியர் குறிப்பிடுகின்றார்.

ஐந்திணைக்கும் உரிப்பொருள் இன்னவென்பதை கீழ்க்காணும் நூற்பாவின் வழி அறியலாம்.

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங்காலைத் திணைக்குரிய பொருளே**[30]

**ஐந்திணைக்குரிய கருப்பொருள்**

கருப்பொருள் என்பது முதற்பொருளாகிய ஐவகை நிலங்கள் பெரும்பொழுது சிறுபொழுது என்னும் காலம் இவற்றைச் சார்ந்து வாழும் உயிரினங்கள் இருக்கும், இருக்கும் பொருள்கள் பயன்படும் பொருள்கள் என அனைத்துமாகும். இவற்றைத் தொல்காப்பியர் தமது தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள அகத்திணையியலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப.**[31]

தெய்வம் முதலாகச் சொல்லப்பட்டனவும் அவ்வகை பிறவும் கருப்பொருளென்கிறார்.

குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் முருகவேள், உணவு தினையும் ஐவனமும் வெதிர் நெல்லும், விலங்கானது யானை, புலி பன்றி கரடி, மரம் வேங்கையும் கோங்குமாகும். பறவை மயில், கிளி, பறை வெறியாட்டுப் பறை, தொண்டகப்பறை, செய்தி தேனெடுத்தல் பண் குறிஞ்சிப்பண,; பூ வேங்கைப் பூ காந்தட் பூ, நீர் சுனை நீர் அருவி நீர் பிறவுமாகும் என்கிறார்.

பாலைத்திணைக்குரிய நிலம் கூறாத காரணத்தால் வேனிற்காலமும் நண்பகலும் அதற்குரியது என்பதால் அங்கு கூறப்படும் தெய்வம் கொற்றவை, உணவு ஆறலைத்தலான் வரும் பொருள் விலங்கு வலிமையிழந்த யானை, புலி, செந்நாய், மரம் பாலை, இருப்பை, கள்ளி, பறவை எருவையும் பருந்தும், பறை ஆரலைப் பறை, கூறை கொண்ட பறை செய்தி ஆறலைத்தல், பண் பாலை பிறவும என்றதால் பூ மராம்பூ, நீர் அறுநீர்க் கூவலும் அறுநீர்ச் சுனையுமாகும்.

மருதத்திற்குத் தெய்வம் இந்திரன் எனவும் வைகறை விடியல் எனக் கூறியமையால் அவ்விடத்தில் நிகழக்கூடிய அனைத்தும் அதற்கு உரியனவாகும்.

நெல் உணவாகவும் எருமையும் நீர்நாயும் விலங்குகளாகவும் மருதும் காஞ்சியும் மரமாகவும் அன்னமும் அன்றியும் பறவைகளாகவும் நெல்லறி பறையாகவும் தொழில் உழவாகவும் மருதப்பண்ணாகவும் பிறவும் என்றதனால் தாமரையும் கழுநீரும் பூக்களாகவும் பொய்கை நீர் மற்றும் ஆற்றுநீர் ஆகியவை மருதநிலத்தில் கருப்பொருளாகவும் இருக்கின்றன என்கிறார் தொல்காப்பியர்.

நெய்தற்குத் தெய்வம் வருணன் மணல் உலகம் என்றதனால் எற்பாடு என்றதனாலும் அங்கு நிகழக்கூடியவை யாதெனில் உணவு உப்பும் மீனுமாகும். விலங்கு சுராவும் சுறவுமாகும். புன்னையும் கைதையும் மரமாகும். பறவைகள் கடற்காக்கை, பறை நாவாய்பறை தொழில் மீன்படுத்தலும் உப்பு விளைத்தலுமாகும். பண் செவ்வழி பிறவும் கொள்க என்ற காரணத்தினால் பூ நெய்தல் நீர் கிணற்று நீரும், கடல் நீருமாகும்.

**திணைக்கு உரிய மக்கள் பெயர்கள்**

ஒவ்வொரு திணையிலும் வாழ்கின்ற மக்களை இரு வகைகளான நிலஅடிப்படையிலும் செய்யும் தொழில் அடிப்படையிலும் பொருந்தி வரும் என்பதை,

**பெயரும் வினையுமென் ஆயிரு வகைய**
**திணைதொறும் மரீஇய திணைநிலைப்பெயரே**[32]

என்று உணர்த்துகின்றார் தொல்காப்பியர். திணைநிலைப்பெயர் என்றதனால் அப்பெயரினையுடையோர் அல்லாத பிறர் நிலத்தினையுடையவர்கள் இல்லை என்று கொள்ளுதல் வேண்டும். ஆகையால் எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை ஒழித்து நிலம்பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து சொல்லப்பட்டது புலனாகின்றது.

முல்லைநிலத்தில் வாழும் நிரை மேய்ப்பாரை ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் குறிக்கப்படும் வந்தது கொண்டு வராதது முடித்தல் எனும் நூற்பாவின் படி ஆயர் என ஆண்களை அழைப்பதுப் போல ஆய்ச்சியர் என பெண்களை அழைப்பர். முல்லை நில தலைமக்கட்பெயர் பொதுவன் என்றும் குறிஞ்சி நில மக்கட்பெயர் குறவன் குறத்தி என்றும் தலைமக்கட் பெயர் மலைநாடன் வெற்பன் என்றும் பாலைக்கு மக்கட்பெயர் எயினர் எயிற்றியர் என்றும் தலைமக்கட் பெயர் மீளி விடலை என்றும் மருதத்திற்கு மக்கட்பெயர் உழவர் உழத்தியர் தலைமக்கட் பெயர் ஊரன் மகிழ்நன் என்றும் நெய்தற்கு மக்கட் பெயர் நுளையர் நுளைச்சியர் தலைமக்கட் பெயர் சேர்ப்பன் துறைவன் கொண்கன் என்றும் கொள்ளப்படும் என்கிறார் தொல்காப்பியர்.

குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருளினைப் பெற்று கருப்பொருளால் பாலைத்திணையானதாக கீழ்வரும் பாடலால் அறியலாம்.

**உயர்கரைக் கானியாற்ற றவிரறல் அகன்றுறை**
**வேனிற் பாதிரி விரிமலர் குவை இத்**
**தொடலை தைஇய மடவரன் மகளே**

**கண்ணினுங் கதவநின் முலையே**

**முலையினுங் கதவநின் தடமென் தோளே**[33]

**ஐந்திணைக்கு உரியராகத மக்கள்**

பிறரிடம் அடிமைத்தொழில் செய்வோரும் பிறர் ஏவிய தொழிலைச் செய்வோரும் புணர்தல். பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்திணைக் ஒழுக்கத்திற்கு உரியவர் ஆகார் அவர்கள் கைக்கிளை பெருந்திணைக்கு உரியவராகவே கொள்ளப்படுவார் என்ற கருத்திணை,

**அடியோர் பாங்கினும் வினைவல் பாங்கினும்**

**கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்**[34]

என்பதன் வழி உணரப்படிகின்றது.

ஏழுவகையான அகத்திணையின் காதல் நிலைகளையும் தொல்காப்பியர் வழி ஆய்வாளர்கள் பின்வருமாறு விளக்குவர்.

ஒருதலைக்காமம் கைக்கிளை

ஒத்த காமம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

ஒவ்வாக்காமம் எனப்படுவது பெருந்திணை இவ்வாறு தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழு திணைகளையும் நாற்கவிராச நம்பி அவர்கள்,

**கைக்கிளையுடையது ஒருதலைக்காமம்**

**ஐந்திணை உணடையது அன்புடைக்காமம்**

**பெருந்திணை உடையது பொருந்தாக்காமம்**[35]

என்று மூன்றாக பகுத்துக் கூறுகின்றார்.

பழந்தமிழரின் அகவாழ்க்கையை தெளிவாக ஆராய்ந்த வ.சுப. மாணிக்கம் அவர்கள் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்னும் முப்பகுப்பினையும் பல்வேறு நிலையில் ஒப்பிட்டு ஆராய்ந்து கீழ்க்காணுமாறு கூறுகின்றார்.

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம், சிறுகாதல், நிகழா ஒழுக்கம், குறுவடிவம் என்றும் ஐந்திணையை ஒத்த காமம், அளவுக்காதல், இயல்பு ஒழுக்கம், நல் வடிவம் என்றும், பெருந்திணை என்பதை ஒவ்வாக்காமம், மிகுதிக்காதல், கழிபேர் ஒழுக்கம், மிகை வடிவம் என்றும் குறிப்பிடுகின்றார்.36

**தொகுப்புரை**

திணைகளின் ஏழு வகைகளையும் ஒவ்வொரு திணைகளின் நிலம் பொழுது என்னவென்பதையும், அதன் வகைகளையும் அந்த நிலத்திற்கான கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோன்றும் பொருள். தேவர், மக்கள், விலங்கு முதலாயினவும் உணவு செயல் முதலாயினவும் பறை யாழ் முதலாயினவும் இன்னும் பிறவாகிய பலவுமாகும் என்றும் திணைமயக்கத்திணையும் திணைக்கு உரிய மக்கள் பெயர்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கபட்டது. மேலும் திணைப்பற்றிய உரையாசிரியர்களின் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம் அகத்திணையியல் இளம்பூரணர் உரை
2. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 1
3. தொல்காப்பியம் புறத்திணையியல் நூற்பா 1
4. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 53
5. நம்பியகப்பொருள் நூற்பா 242
6. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 2
7. சிலப்பதிகாரம் 11 64 – 66
8. புதிய கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், பக். 45
9. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 3
10. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் இளம்பூரணர் உரை
11. தமிழ் செவ்வியல் இலக்கியங்கள், ப.106
12. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 4
13. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 5
14. முல்லைப்பாட்டு 10
15. குறுந்தொகை 3
16. அகநானூறு 286
17. குறுந்தொகை 9
18. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 6
19. மேலது நூற்பா – 7
20. மேலது நூற்பா – 8
21. மேலது நூற்பா – 9
22. மேலது நூற்பா – 10
23. மேலது நூற்பா – 11
24. மேலது நூற்பா – 12
25. மேலது நூற்பா – 13
26. மேலது நூற்பா – 14
27. அகநானூறு 48
28. தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் நூற்பா 112
29. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 21
30. மேலது நூற்பா – 16
31. மேலது நூற்பா – 20
32. மேலது நூற்பா – 22

33. ஐங்குநுறூறு பாடல் எண் 361
34. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா – 25
35. அகப்பொருள் விளக்கம் 3,4,5
36. தமிழ்க்காதல் பக். 203,235,266

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் உரை தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
திருநெல்வேலி தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்,
154, டி.டி.கே. சாலை, சென்னை – 18

2. முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ் தொல்காப்பிய பொருளதிகாரம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை

3. மாணிக்கம், வ.சுப தமிழ்க்காதல்
மெய்யப்பன் தமிழாய்வகம்
சிதம்பரம் - 1
முதற் பதிப்பு, ஜீன், 2010

4. மாதையன், பெ. சங்க இலக்கியத்தில் குடும்பம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்